**செய்தி வெளியீடு எண் : 592** **நாள்: 12.04.2022**

## செய்தி வெளியீடு

தமிழ் வளர்ச்சித் துறைக்கான 2021-2022ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் "நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான **மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர்** ஆகியோரின் கருத்துக்களையும் சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வண்ணம் ஆண்டுதோறும் அவர்களது பிறந்த நாளன்று மாவட்ட அளவில் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசு, பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்" என அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்கிணங்க (14.04.2022).அண்ணல் அம்பேத்கர் **பிறந்தநாளையொட்டி 19.04.2022ஆம்** நாளில் கல்லூரி, பள்ளி மாணவர்களுக்குத் தனித்தனியே பேச்சுப் போட்டி நடைபெறவுள்ளது.

**பேச்சுப் போட்டியில் வெற்றி பெறும் கல்லூரி மாணவர்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும்**

1. முதல் பரிசு ரூ.5000/-
2. இரண்டாம் பரிசு ரூ.3000/-
3. மூன்றாம் பரிசு ரூ. 2000/- என்ற வகையில் வழங்கப்படும்.

மேலும் இப்போட்டியில் பங்கேற்கும் அரசுப் பள்ளி மாணவர்களிலிருந்து இருவர் மட்டும் தெரிவு செய்து அவர்களுக்கு சிறப்புப் பரிசுத் தொகை ரூ.2000/- வீதம் தனியே வழங்கப்பெறும்.

<u>போட்டி நாள் : 19.04.2022</u>

பள்ளிப்போட்டி நடைபெறும் இடம் நேரம் மு.ப 10.00மணி

| வட சென்னை | தென் சென்னை | மத்திய சென்னை |
|---|---|---|
| தருமமூர்த்தி ராவ்பகதூர் காலவல கண்ணன் செட்டி இந்து மேல்நிலைப்பள்ளி பெரம்பூர், | ராமகிருஷ்ண மடம் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, தியாகராய நகர், | குழந்தைகள் தோட்டம் மகளிர் மேல்நிலைப்பள்ளி, மயிலாப்பூர் |

கல்லூரிப்போட்டி நடைபெறும் இடம்  நேரம்    மு.ப 10.00 மணி

| வட சென்னை | தென் சென்னை | மத்திய சென்னை |
|---|---|---|
| அம்பேத்கர் கலைக் கல்லூரி<br>வியாசர்பாடி,<br>சென்னை | **சென்னை மாநிலக் கல்லூரி,**<br>**சேப்பாக்கம்**<br>**சென்னை** | பாரதி மகளிர் கலைக் கல்லூரி<br>பிராட்வே<br>சென்னை |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews   tndipr   tndipr   TN DIPR   www.dipr.tn.gov.in